**ஜூலை - 13**

**"சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே." 2கொரி 11 : 14, 15.**

ஒரு நல்ல வேலையைச் செய்வதில் சாத்தானுக்கு எப்படி அக்கறை இருக்கக்கூடும் என்று கேட்கப்பட்டால், நாங்கள் உத்தரவு சொல்லுகிறோம். உலகிற்கு ஒளியாயிருக்கிறவரிடத்திற்கு வழிநடத்த அல்ல. ஆனால், இவைகளில் இருந்து பிரித்து, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் ஏமாற்றுவதற்காக மற்றொரு இரட்சிப்பின் நம்பிக்கைக்கும் மற்றொரு போதகரிடத்திற்கும் அழைத்துச் செல்ல எதிராளி இவ்விதமாக ஒரு ஒளியின் இரக்கத்தின் தூதனுடைய வஸ்திரத்தை உடுப்பாக உடுத்திக் கொள்கிறான். சாத்தான், சாத்தானைத் துரத்தி வியாதிகளை குணமாக்கும் நிலைக்குக் காரியங்கள் வரும்போது, இதுதான் எதிராளியின் ஏமாற்றுதலின் முயற்சிக்குக் கடைசி முடிவு எனும்படியாக அவனுடைய சிம்மாசனம் விழுவதற்கு ஆடிக்கொண்டிருக்கிறதென்பதற்கு ஒரு கவனிக்கத்தக்க சான்றாகும் என்பதை நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன என்பதை ஞாபகத்துக்குக் கொண்டு வருவோமாக. **- Z ’99, 62 (R 2667)**

சாத்தானில் நாம் நமது இருதயத்தின் சோதனை நிறைந்த ஒரு எதிரியை உடையவர்களாக இருக்கிறோம். அவனுடைய பெரிய தந்திரத்தினாலே, தனிமையாகவும், துணையில்லாமலும் இருந்தால், நாம் ராட்சதனுடைய கைகளிலிருக்கிற சித்திரக்குள்ளன் மாதிரி இருப்போம். அவன் அவ்வளவு தந்திரசாலியாக இருக்கிறதினால், நன்மை தீமையைப்போல தோன்றவும், தீமை நன்மையைப்போல தோன்றவும் அவனால் செய்யக்கூடும். கூடுமானால், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் ஏமாற்றத்தக்கதாக அவன் தன்னுடைய சுயநல நோக்கங்களுக்காகத் தன்னுடைய ஊழியக்காரரை நீதியின் ஊழியக்காரரைப்போல தோன்றச் செய்கிறான். ஆகையால், அவனுக்கு எதிராகவும் அவனுடைய ஊழியக்காரரின் கபடமான சதிகளுக்கு எதிராகவும் நாம் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். **- P ’33, 80.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 3:1-5,13-15; யோவா 8:44; 2கொரி 11:3,4,13; 2தெச 2:9; வெளி 12:9;20:1-3: 7-9; அப் 20:29-31; ரோம 16:17; கலா 1:8; பிலி 3:18,19; 2தீமோ 3:1-9; 2பேது 2; 1யோவா 4:1-6; 2யோவா 7-10; யூதா 19; வெளி 2:2,13-15; 20-24.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 341 (R 5799)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் சாத்தானும், அவன் ஊழியக்காரரும் என்னை ஏமாற்ற முயன்றனரா? எப்படி? நான் தோல்வியடைந்தேனா? அல்லது மேற்கொண்டேனா? எப்படி? பலன்கள் எவை?**